Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 315

வெள்ளிக்கிழமை
07 ஒக்ரோபர் 2022

புரட்டாதி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## மின்னல் தாக்கி ஒருவர் இறப்பு!

தெல்லிப்பழையில் துயரம்

யாழ்ப்பாணம், ஒக். 7
மின்னல் தாக்கியதில் தெல்லிப்பழையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். தெல்லிப்பழை - சித்தியம்புளியடியைச் சேர்ந்த மகாலிங்கம் 09

# சிறிலங்காவுக்கு 'அவகாசம்' ஐ.நா.வில் நிறைவேற்றம்!

## இந்தியா நழுவல்

ஜெனிவா, ஒக்ரோபர் 7

'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற புதிய வரைவின் கீழ் மீண்டுமொரு அவகாசத்தை இலங்கைக்கு வழங்கும் தீர்மானம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நேற்று நிறைவேற்றப்பட்டது. 11

## ஐ.நா.வின் தீர்மானத்தை நிராகரித்தது இலங்கை!

கொழும்பு, ஒக். 7
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கை தொடர்பான புதிய தீர்மானத்தை அரசாங்கம் அடியோடு நிராகரித்துள்ளது. 11

## ஐ.நா. தீர்மானத்துக்கு சீனா கடும் எதிர்ப்பு!

கொழும்பு, ஒக். 7
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நேற்றுக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு சீனா கடும் எதிர்ப்பைப் 09

## சர்வதேச சகாக்களுடன் இணைந்து செயற்படுக!

ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 7
இலங்கை அரசாங்கம் சர்வதேச சகாக்களுடனும் ஐக்கிய நாடுகள் சபையுடனும் இணைந்து செயற்படவேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது ஐரோப்பிய ஒன்றியம்.
இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நேற்று நிறைவேற்றப்பட்ட 09

### முச்சந்தி முரளி



"ஒரே இடத்திலேயே வாலையும், தலையையும் மாத்தி மாத்தி காட்டுற விலாங்குமீன் விளையாட்டில இந்தியா கெட்டிக்கார நாடு பாருங்கோ"

## அர்த்தமான அதிகாரப்பகிர்வில் முன்னேற்றம் போதுமானதல்ல!

விரைந்து உறுதிப்படுத்த வேண்டுமென்று இலங்கையை வலியுறுத்தியது இந்தியா

கொழும்பு, ஒக். 7
'13'ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துதல், அர்த்தபூர்வமான அதிகாரப்பகிர்வு, மாகாணசபை தேர்தல்களை முன்கூட்டியே நடத்துதல் குறித்த தனது உறுதிமொழிகளை இலங்கை அரசாங்கம் விரைந்து நிறைவேற்றவேண்டுமென இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்த தீர்மானத்தின் மீதான 11

## ஜெயபுரம் பகுதியில் சித்தவைத்தியரின் வீட்டில் திருட்டு!

கிளிநொச்சி, ஒக். 7
கிளிநொச்சி - ஜெயபுரம் பகுதியில் சித்தமருத்துவரொருவரின் வீட்டில் நேற்றுமுன்தினம் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.
குறித்த வைத்தியர் தனது பணியின் நிமித்தம் வெளியில் சென்றிருந்ததை வாய்ப்பாகப் பயன்படுத்திய 09

## அடுத்த போகத்துக்கு அனைத்தும் தயார்

நம்பிக்கை விதைக்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஒக். 7
அடுத்த பெரும் போகத்தை எந்தவித தடையுமின்றி வெற்றிகரமாக மேற்கொள்வதற்குத் தேவையான விதை நெல் மற்றும் உரங்கள் என்பன தயார்ப்படுத்தப்பட்டுள்ளன - இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- 11

## கல்மடுநகர் பகுதியில் பணம், நகை திருட்டு!

கிளிநொச்சி, ஒக். 7
கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் பகுதியில், வீடொன்றின் கூரையைப்பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் 5 பவுண் தங்க நகைகள், 49 ஆயிரத்து 500 ரூபா பணம், அலைபேசிகள் என்பன வற்றைத் திருடிச் சென்றுள்ளனர். 09

## முரண்பாடுகளை மறந்து சகலரும் ஒன்றுபடுங்கள்!

ஜனாதிபதி ரணில் மீண்டும் அழைப்பு

கொழும்பு, ஒக். 7
அண்மைக்கால வரலாற்றில் நாடு எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக பழையமுரண்பாடுகளை மறந்து பொது வேலைத் திட்டத்தில் அனைவரையும் இணையு 11

## ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 7
யாழ்ப்பாணம் - கோண்டாவில் பகுதியில் ரயிலுடன் மோதுண்ட ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணிக்கு இடம்பெற்றது. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது அமர்வு பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 8 ஆம் திகதிவரை 8 அமர்வுகளாக இடம்பெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2 ஆயிரத்து 378 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர். (ச)

# கடன் மறுசீரமைப்பு பேச்சு பின்வாங்கும் ஜப்பான்

**கொழும்பு, ஒக்.7**

**இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளுடன் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளும் பேச்சில் இணைத் தலைமை வழங்க இலங்கையுடன் ஜப்பான் இன்னும் எந்தவித உடன்பாட்டையும் எட்டவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்த விடயம் பற்றி நேரடியாக அறிந்த ஜப்பான் அரசாங்கத்தின் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகமான ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடன்கொடுநர்களுடனான, கடன் மறுசீரமைப்பு பேச்சில் இலங்கையுடன், இணைத் தலைமை வகிக்க ஜப்பான் இணக்கம் வெளியிட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய விசேட உரையில் தெரிவித்திருந்தார்.

முன்னதாக கடன் மறுசீரமைப்பு விடயத்தில் இலங்கையின் கடன் கொடுநர்களை ஒன்றிணைக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கத் தாம் தயார் என்று ஜப்பான் அரசாங்கம் அறிவித்திருந்தது.

அண்மையில் ஜப்பான் சென்றிருந்த ஜனாதிபதி, அந்தநாட்டு அரசாங்கத்துடன், முன்னெடுத்த பேச்சின்போது, இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு விடயத்தில் ஜப்பான் இணக்கம் தெரிவித்தது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

ஆயினும், ஜனாதிபதியின் நேற்றைய விசேட உரையை அடுத்து வெளியாகியுள்ள இந்த செய்தியின்படி, இந்த விவகாரம் முக்கியமான ஒன்று என்பதால் இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் ஜப்பான் முழுமையாக ஆதரவளிக்கத் தயாராக உள்ளது என்று பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரியொருவரை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது. (எ-இ)

## ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுங்கள்

*இலங்கை ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்*

கொழும்பு, ஒக். 7

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு அல்லது கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் இது தொடர்பாக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் மற்றும் அதிபர்களின் உரிமைகளை வென்றெடுத்த பிரதிநிதிகளின் மாநாட்டில் கலந்துகொண்டபோதே ஜோசப் ஸ்டாலின் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்தப் பொருளாதாரக் கொள்கையில் அரசாங்கம் நாட்டை முழுவதுமாக திவாலாக்கி விட்டது. தற்போது, ஆசிரியர்கள் பாடசாலைக்குவரவழியில்லை. கடுமையான பயணச் செலவுகளைச் சுமக்க வேண்டியுள்ளது. இதுகுறித்து அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளோம்- என்றார். (எ-14,இ)

## கொக்குவிலில் நேற்றிரவு வாள்வெட்டுத் தாக்குதல்!

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்குவில் பகுதி வீதியில் வன்முறைக் கும்பல் ஒன்று நடத்திய வாள்வெட்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் ஒருவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு காங்கேசன்துறைவீதி கொக்குவில் வைரவர் கோவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வாள்வெட்டுத் தாக்குதலில் புத்தூர் அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த செல்வராசா ரதீஷ்குமார் (வயது-41) என்பவரே படுகாயமடைந்தார். குறித்த நபர் முச்சக்கரவண்டியில் தனது வீடு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வேளை 3 மோட்டார் சைக்கிள்களில் வந்த அறுவரடங்கிய வன்முறைக்கும்பல்அவர் மீது வாளால் வெட்டி தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

## மன்னார் மாவட்டத்தில் இஞ்சி அறுவடை விழா



மன்னாரில் முதன்முறையாக செய்கை பண்ணப்பட்ட இஞ்சி உற்பத்தி அறுவடை விழா மன்னார்-இரணை இலுப்பைக்குளத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

இஞ்சிப் பயிர்ச்செய்கை குறித்து நிகழ்வில் கலந்துகொண்ட விவசாய திணைக்கள பூங்கனியியல் பாடவிதான உத்தியோகத்தர் திருமதி இருதயநாதன் அர்ஜின் குரூஸ் தெரிவிக்கையில்;

இஞ்சி நாடுமுழுவதும் பயிரிடப்பட்டு வருகின்றபோது குறிப்பாக ஈரவலயம் மற்றும் இடைவெப்பவலயங்களில் செய்கை பண்ணப்படுகின்றது.

மேல் மாகாணத்தில் அரிதளவாகவே பயிரிடப்பட்டுவரும் இஞ்சிச் செய்கை குருநாகல், கண்டி, கம்பளை, கம்பஹா, கேகாலை ஆகிய பிரதான மாவட்டங்களில் பயிரிடப்படுகின்றது. தற்போது மன்னாரிலும் பயிரிடப்பட்டு அறுவடை விழா காண்பது பெருமையளிக்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் இரணை இலுப்பைக்குளம் விவசாய போதனாசிரியர் பிரிவில் 45 ஏக்கர் நிலப்பரப்பில் தனிப் பயிராக தூவல் நீர்ப்பாசனத் திட்டத்தில் விவசாயி ஒருவரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இஞ்சி அறுவடை மார்ச் மாதம் நடுப்பகுதி முதல் ஏப்ரல் மாதம் ஆரம்பம் வரை மேற்கொள்ளப்படுகின்றது. இஞ்சி அறுவடைக்கு ஏற்ற காலமாக ஏறக்குறைய 8 மாதம் தொடக்கம் 10 மாதங்கள் வரை காணப்படுகின்றது.

இஞ்சிச் செய்கையானது விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனையின்படி ஒரு ஹெக்டேயருக்கு சுமார் 15 தொடக்கம் 18 மெற்றிக்தொன் விளைச்சலை பெற்றுக்கொள்ளமுடியும்.

பண்டைக்காலம் தொடக்கம் வாசனைத்திரவியமாக பயன்பட்டுவரும் இஞ்சி தற்போது தூள் இஞ்சி, ஊறுகாய் இஞ்சி, இனிப்பூட்டிய இஞ்சி என பலவாறு சந்தைப்படுத்தப்படுகின்றது - என்றார். (ச-14,60)

## கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 7

புத்தூர் - வாதரவத்தை பெரிய பொக்கணைப் பகுதியில் நீண்ட நாள்களாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் கைது செய்யப்பட்டார் என்று காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 35 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 30 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் அச்சுவேலி பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-14,23)

## மோ.சைக்கிள் திருட்டு பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 7

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருட்டுப் போயுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நம்பாப்புலம் - அராலி வடக்குப் பகுதியில் உள்ள வீடொன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த BII 4822 எனும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிளே திருடப்பட்டது என்று உரிமையாளரால் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-14,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் சீனா, இந்தியாவுடன் தொடர்பு!

கொழும்பு, ஒக்.7

**இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பேச்சுக்கள் தொடர்பில் பாரிஸ் கிளப்பின் கடன் வழங்குநர்கள் இந்தியா மற்றும் சீனாவை தொடர்புகொண்டுள்ளனர்.**

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பேச்சுக்களை ஒருங்கிணைப்பது தொடர்பில் பாரிஸ் கிளப்பின் கடன் வழங்குநர்கள் இந்தியா மற்றும் சீனாவை தொடர்புகொண்டுள்ளனர் என இவ் விடயங்கள் தொடர்பாக நன்கறிந்த நபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வளர்ந்துவரும் நாடுகளின் கடப்பாடுகள் தொடர்பில் மீள்செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக கடன் வழங்கியவர்களை ஒன்றிணைக்கும் முயற்சியையே பாரிஸ் கிளப் மேற்கொண்டுள்ளது. மேற்குலகின் இரு தரப்பு கடன்வழங்குநர்களை செல்வந்த நாடுகளை உள்ளடக்கிய பாரிஸ் கிளப் இணைந்து செயற்படுவதற்கு அழைப்பு விடுத்து ஓகஸ்ட் மாதத்தில் சீனா, இந்தியா நாடுகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

அதற்கு இதுவரை பதில் இல்லை என தனது பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பாக ஒருங்கிணைப்பது உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்கள் குழுவை ஏற்படுத்துவதற்கு உதவலாம் அல்லது கடன்மறுசீரமைப்பு தொடர்பில் வழமையான சந்திப்புகளை நடத்த உதவலாம் என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். இலங்கை ஜனாதிபதிக்கு இந்த முயற்சிகள் தொடர்பாகத் தெரியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையைத் தளமாகக் கொண்ட ஆசிய இராஜதந்திரியொருவர் பாரிஸ்கிளப் தனது அமைப்பில் அங்கத்துவம் வகிக்காத கடன் வழங்குநர்களுடன் தொடர்பு கொண்டுள்ளது என்பதை உறுதி செய்துள்ளார். ஆயினும், இது தொடர்பாக சீன, இந்திய அதிகாரிகளிடம் கருத்துக்களை பெற முடியவில்லை. (எ-இ)

## பணவீக்கத்துக்கு இணையான வேதன உயர்வை வழங்குங்கள்

### அரசாங்கத்திடம் கோரிக்கை

கொழும்பு, ஒக்.7

அதிகரித்துள்ள பணவீக்கத்துக்கு இணையான கொடுப்பனவு, அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்ட அந்தச் சங்கத்தின் பொதுச்செயலாளர் தம்மிக்க முணசிங்க 2016 ஆம் ஆண்டுக்கு பின்னர் அரச உத்தியோகத்தர்களுக்கு வேதனம் அதிகரிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வாழ்க்கைச் செலவினம் தாங்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது. உணவுப் பணவீக்கம் 80 சதவீதத்தைக் கடந்துள்ளது. அண்மையில் இடைக்காலப் பாதீடு முன்வைக்கப்பட்ட போதிலும், அதில் எந்தவித ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை.

அரசாங்கத்தின் பணவீக்கத்துக்கு இணையான கொடுப்பனவு வழங்க வேண்டும். பொருள்கள் மற்றும் எரிபொருள் விலையை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் - என்றார். (எ-இ)

## தொலைபேசிக் கட்டணங்களின் அதிகரிப்புக்கு அனுமதியில்லை

கொழும்பு, ஒக்.7



தொலைத்தொடர்பு நிறுவனங்கள் அறிவித்துள்ள தொலைபேசி மற்றும் இணைய கட்டண அதிகரிப்புக்கு அனுமதி பெறப்படவில்லை என தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிக்கு அமைய, நேற்று முதல் அமுலாகும் வகையில் தமது கட்டணங்களை மீண்டும் அதிகரிக்க அனைத்து தொலைத்தொடர்பு சேவை வழங்கல் நிறுவனங்களும் தீர்மானித்தன.

நேற்று முதல் தொலைக்காட்சி சேவைகள், முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு கட்டணப் பொதிகள் திருத்தப்படவுள்ளன. புதிய கட்டணங்கள் தொடர்பிலான தகவல்கள் அந்தந்த தொலைத்தொடர்பு நிறுவனங்களின் இணையத்தளங்களில் தரவேற்றப்பட்டுள்ளன.

ஆயினும், இந்தக் கட்டண உயர்வு தொடர்பில் இதுவரை எவ்வித அனுமதியும் பெறப்படவில்லை என தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (எ-இ)

## பொதுப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் ஆட்பதிவு, குடிவரவு திணைக்களங்கள்

கொழும்பு, ஒக். 7

ஆட்பதிவுத் திணைக்களம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் மற்றும் தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டுச் சபை ஆகியவற்றை பொதுப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கான விசேட வர்த்தமானியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளார்.

அரசமைப்பின் 44 ஆவது சரத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னதாக ஆட்பதிவுத் திணைக்களம் தொழில்நுட்ப அமைச்சின் கீழும் குடிவரவு குடியகல்வு திணைக்களம் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் கீழும் இருந்தது. அத்துடன், தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டுச் சபை, முன்பும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-14-இ)

## தென்மராட்சி வலய ஆசிரியர் தின நிகழ்வு

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தின நிகழ்வு எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-9)

## கோப் குழுவின் தலைமை பொதுஜன பெரமுனவிடம்

நாடாளுமன்றக் கட்டமைப்பில் உள்ள மிக முக்கிய குழுக்களில் ஒன்றான 'கோப்' எனப்படுகின்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைமைப்பதவியை, சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி தக்கவைத்துக்கொண்டுள்ளது.

மக்கள் எழுச்சி ஏற்பட்டபோது 'கோப்' குழுவின் தலைமைப்பதவியை எதிரணிக்கு வழங்குவதற்கு இணக்கம் எட்டப்பட்டிருந்தாலும் தற்போது அந்த முடிவு திடீரென மாற்றப்பட்டு, தலைமைப்பதவியை மொட்டுக் கட்சியே தக்கவைத்துக்கொண்டுள்ளது.

'கோப்'குழுவின் முதலாவது கூட்டம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது. இதன்போது தலைவரை, ஏகமனதாகத் தெரிவுசெய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அதையடுத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன்போது மொட்டுக் கட்சி எம்.பியான பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவின் பெயரை மஹிந்தானந்த அளுத்கமகே முன்மொழிய, அதை ரோஹித அபேகுணவர்த்தன வழிமொழிந்துள்ளார். எதிரணி சார்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்னவின் பெயர் முன்மொழியப்பட்டது. ரஞ்சித் பண்டாரவுக்கு ஆதரவாக 14 வாக்குகளும், எரானுக்கு ஆதரவாக 7 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 7 மேலதிக வாக்குகளால் ரஞ்சித் பண்டார கோப்குழுவின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். கோப் குழுவில் மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே பெரும்பான்மையாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-44)

## சுகாதாரப் பரிசோதகர் மீது பரந்தனில் தாக்குதல்

கிளிநொச்சி, ஒக். 7

கண்டாவளை சுகாதாரப் பணிமனையின் கீழ்ப் பணியாற்றும் சுகாதாரப் பரிசோதகர் மீது கடந்த செவ்வாய்க்கிழமை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பரந்தன் நகர்ப்பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் சோதனை மேற்கொண்டு பல விடயங்கள் தொடர்பான அறிவுறுத்தலை சுகாதாரப் பரிசோதகர் மேற்கொண்டுள்ளார்.

அதன் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி சென்று திரும்பி வரும் வேளையில் பரந்தன் பகுதியில் வைத்து சுகாதாரப் பரிசோதகர் மீது சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த சுகாதாரப் பரிசோதகர், சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (எ-14-113)





கல்வி அமைச்சின் இசுருபாய கட்டடத்தில் நேற்று விஜயதசமி பூசை வழிபாடு மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் சிறப்பாக இடம்பெற்றது. நிகழ்வில் கல்வி அமைச்சர் சட்டத்தரணி சுசில் பிரேமஜெயந்த, இராஜாங்க அமைச்சர் அரவிந்த் குமார், இராஜாங்க அமைச்சர் விஜித் பேருகொட, கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. சென்று பயனில்லை எம்முடனே பேசவேண்டும்

## கூட்டமைப்புக்கு கூறுகிறார் அமைச்சர் கெஹலிய



**கொழும்பு, ஒக். 7**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள். எனவே, தமிழ் மக்க ளின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காக அரசுடன் பேச்சு நடத்த அவர்கள் முன்வர வேண்டும். இவ்வாறு அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இன, மத ரீதியான பிரச்சினைகள் இருந்தால் அவற்றை உடனே பேசித் தீர்க்கவேண்டும்.

பிரச்சினைகளுக்குப் பேச்சு மூலம் உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் மிகவும் அக்கறையாக உள்ளனர்.

எனவே, தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அரசு மீது நம்பிக்கை வைத்து நெருங்கிச் செயற்பட வேண்டும். அதைவிடுத்து அவர்கள் தொலைவில் இருந்துகொண்டு எதிர்க்கட்சியினருடன் கைகோர்த்துக்கொண்டு அரசை விமர்சிப்பதில் எந்தப் பயனும் இல்லை.

ஜெனிவா செல்வதன் ஊடாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக் குத் தீர்வு காண முடியாது. இதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட தமிழ் அரசியல்வாதி கள் கவனத்திற் கொள்ள வேண்டும் - என்றார். (ஒ-22)

# பல்கலைக்கழகங்களினுள் அரசியல் தீயை மூட்டாதீர்!

## சுரேன் ராகவன் கோரிக்கை



கொழும்பு, ஒக். 7

பல்கலைக்கழகங்களினுள் அரசியல் தீயை மூட்ட வேண்டாம் என்று வலியுறுத்திய உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், 'பல்கலைக்கழகத்திலோ வெளியிலோ வன்முறைக்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது. ஒருவரது மனித உரிமையை விட 99 வீதமானோரின் மனிதஉரிமை தொடர்பிலேயே கவனம் செலுத்துவோம்' என்றும் கூறினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை சம்பவங்கள், அது தொடர்பிலான பெற்றோரின் முறைப்பாடுகள் மற்றும் அங்கு இடம்பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பில் இவ்வாறு தெரிவித்த உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், மேலும் கூறுகையில்,

நாட்டில் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளனர். அதில் ஒரு சிலரது மனிதஉரிமை பற்றி கவனம் மேற்கொள்வதா? அல்லது 99 வீதமானோரின் மனித உரிமை தொடர்பில் கவனம் செலுத்துவதா? என்பது தொடர்பில் கற்றவர்கள் நன்கு அறிவர்.

அரசியல் நோக்கத்திலும் பல்வேறு நோக்கங்களிலும் ஒரு சிலர் பல்கலைக்கழகங்களினுள் செயற்பட்டு வருகின்றனர். தயவுசெய்து அங்கு அரசியல் தீயை மூட்ட வேண்டாம் என நாம் கேட்டுக் கொள்கின்றோம். பேராதனைச் சம்பவங்கள் தொடர்பில் எனக்கு பெற்றோர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து 600 இற்கும் மேற்பட்ட குறுஞ்செய்திகள் வந்துள்ளன. மனித உரிமையை நாம் மதிக்கின்றோம். எனினும், குறுகிய நோக்கங்களுக்காகச் செயற்படுபவர்களையும் மற்றும் வன்முறைகளையும் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் - என்றார். (ஒ-22)

# அடக்க அடக்க போராட்டம் மேலும் வீரியமாகும்

## ரணிலுக்கு ராஜித எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 7

அடக்குமுறைகள் மூலம் போராட்டக்காரர்களின் குரல்களை ஒருபோதும் நசுக்க முடியாது. இந்த அடக்குமுறைகள் அரசுக்கு எதிரான மக்கள் போராட்டத்தை மேலும் எழுச்சி பெற வைக்கும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போராட்டக்காரர்கள் மீதான அரச படைகளின் அடக்குமுறைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. இதன் விபரீதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் உணர்ந்துகொள்வார்.

அரச படைகளையும் தமது அடிவருடிகளையும் மக்கள் மீது ஏவிவிட்டு ஆட்சியைத் தொடர்ந்து முன்னெடுக்கலாம் என்று கனவுகண்ட ராஜபக்சக்களுக்கு இறுதியில் என்ன தண்டனை கிடைத்தது என்பதை தற்போதைய ஜனாதிபதி ரணில் மறக்கவேமாட்டார்.

அமைதி வழியில் போராடும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் மற்றும் சிவில் சமூகத்தினர் மீது பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் வலிந்து தாக்குதல்களை நடத்துகின்றனர்.

அவசியமில்லாத நேரங்களில்கூட கண்ணீர்ப்புகைக் குண்டுகள் போராட்டக்காரர்கள் மீது வீசப்படுகின்றன. நீர்த்தாரைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதிதான் இதற்கு முழுப் பொறுப்புக்கூறவேண்டும் - என்றார். (ஒ-22)

# கையிருப்பிலுள்ள பைஸர் 31 ஆம் திகதியுடன் காலாவதி




கொழும்பு, ஒக். 7

நாட்டில் கையிருப்பிலுள்ள பைஸர் தடுப்பூசிகள் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் காலாவதியாகவுள்ளன என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, 7 மில்லியன் பைஸர் தடுப்பூசிகள் இந்த மாத இறுதியில் காலாவதியாகவுள்ளன.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால், மக்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை எனவும் சுகாதாரப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (எ-14,இ)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சுட்டுப் படுகொலை!

## மினுவாங்கொடையில் சம்பவம்

கம்பஹா மாவட்டத்துக்குட்பட்ட மினுவாங்கொடைப் பகுதியில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.துப்பாக்கிச் சூட்டில் 51 வயதான தந்தை மற்றும் அவரது 23, 24 வயதுடைய இரு மகன்கள் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் மற்றும் கார்களில் வந்த இனந் தெரியாத குழுவினர், வீட்டுக்குள் புகுந்து துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இருகுழுக்களிடையே நிலவிவந்த முரண்பாடு காரணமாக இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருக்கலாம் எனவும், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும், பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# மக்கள் விருப்புக்கு மாறான நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டும்

## கஜேந்திரகுமார் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 7

பிரதமர், ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை பதவி விலகிய பின்னர் நாடாளுமன்றத்தில் மக்களின் விருப்பம் பிரதிபலிக்கப் படவில்லை என்றும், அதனால் நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற நிலையியல் கட்டளைகள் திருத்தம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றக் குழுக்கள், நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையாக இருக்கவேண்டும்.

அத்துடன், நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே முடிவெடுக்கப்படுகின்றது. ஒரு வருடமாக நான் அந்தக் கூட்டங்களில் நிராகரிக்கப்பட்டேன். எங்கள் கட்சி சார்பில் இரண்டு உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால், எங்களுக்கு அந்தக் குழுவில் இடமளிக்கப்பட்டிருக்கவில்லை.

இதேவேளை, நிதிக் குழுக்கள் மற்றும் சட்டவாக்கம் தொடர்பான குழுக்களில் நாங்கள் அங்கம் வகிக்க வேண்டும். அத்துடன், நேர ஒதுக்கீட்டு விடயத்தில் நான் கட்சித் தலைவர். அதன்படி பேசுவதற்கு நேரம் வழங்கப்படவேண்டும். இதனால் குறைந்தளவு நேரமாவது வழங்கவேண்டும். எங்களின் கட்சிகள் போன்ற சிறிய கட்சிகள் மதிய நேரத்தின் பின்னர் பேசும் போது 12 நிமிடங்களாவது வழங்க வேண்டும்.

முன்னைய பிரதமரும், ஜனாதிபதியும், அமைச்சரவையும் பதவி விலகிய பின்னர் இந்தச் சபை மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கவில்லை என்பதைக் கூறிக்கொள்கின்றேன். எவ்வாறாயினும் இந்த நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டும். இப்போதும் மக்களின் அந்த விருப்பம் நிராகரிக்கப்படுகின்றது.

அத்துடன், குருந்தூர்மலை என்பது தமிழ் மக்கள் வழிபாட்டில் ஈடுபடும் ஒரு புராதன இடமாகும். தொல்பொருள் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்த விதுர விக்கிரமநாயக்க அங்கு அடிக்கல் ஒன்றை நாட்டியிருந்தார். அந்த இடத்தைப் பௌத்த விகாரையாக மாற்றுவதற்கு முயற்சித்துள்ளனர். அந்த இடத்தை அழித்துவிட்டு அவ்வாறு விகாரையாக மாற்ற முடியுமா? அதற்கு யார் அனுமதி கொடுத்தது? குறித்த விடயத்தில் நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொல்பொருள் திணைக்களம் ஓர் இனவாதத் திணைக்களமாகக் காணப்படுகின்றது. தொழிற்படும் விதமும் அப்படித்தான் உள்ளது. பௌத்த மதகுருவும் நீதிமன்ற உத்தரவை மீறியுள்ளார். உத்தரவாதம், உரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளபோதும், தொடர்ச்சியாக இனவாத நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன - என்றார். (ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இனியும் வேண்டாம் ஏமாற்று நாடகம்

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் மிகப் பெரிய எதிர்ப்பு எதுவுமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது. இது முன்னரே எதிர்பார்க்கப்பட்டதுதான். இப்படிப் பல தீர்மானங்கள் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டிருந்தாலும் அதன் விளைவுகள் என்னமோ இதுவரையில் பூஜ்ஜியம்தான். 2012 ஆம் ஆண்டு அமெரிக்காவால், இலங்கைக்கு எதிரான தீர்மானம் முதன் முதலில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்டது. அப்போது அந்தத் தீர்மானத்தின் கனதி கேள்விக்குள்ளாக்கப்பட்டபோது, இலங்கையின் 'இறுதிப்போரின் மீதான போர்க்குற்றங்கள் தொடர்பில் உடனடியாக நீதி கிடைக்காது. கால ஓட்டத்தில் நீதி கிடைப்பதற்கு இந்தத் தீர்மானங்கள் வழிசமைக்கும்' என்று கூறி, தமிழ் மக்கள் சமாளிக்கப்பட்டனர். தொடர்ந்து இதே கதையைக் கூறிக்கொண்டே, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பெயரால் இலங்கை அரசுக்கு மேலும் மேலும் கால அவகாசம் கொடுத்து தப்பிக்க வைக்கும் வகையிலேயே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தன. இப்போதும் அப்படியானதொரு தீர்மானமே நிறைவேற்றப்பட்டுள்ளது. இம்முறை தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே, இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு முற்படுத்தவேண்டும் என்று அழுத்தமான நிலைப்பாடு தமிழர் தரப்பால் வெளிப்படுத்தப்பட்டது. ஆனாலும், வழமைபோன்று பாதிக்கப்பட்ட தமிழர் தரப்புக்கான நீதியை வழங்குவதற்குப் பதிலாக தமது நிகழ்ச்சி நிரல்களை வல்லரசு நாடுகள் நிறைவேற்றிக் கொண்டுள்ளன.


இதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தோலுரித்துக்காட்டியுள்ளது. தமிழ் மக்களின் பெயரால், அவர்களது கோரிக்கைகளைப் புறந்தள்ளி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நிராகரிப்பதாக மாணவர் ஒன்றியம் தனது அறிக்கையில் விலாவாரியாக விவரித்துள்ளது. 'இந்தத் தீர்மானம் பல தசாப்தங்களாகத் தொடர்ந்து வந்த சிறிலங்கா அரசாங்கங்களால் தமிழர்கள் எதிர்கொண்ட கொடுமைகளுக்குத் தீர்வு வழங்கத் தவறிவிட்டது. இந்தத் தீர்மானம் குற்றம் இழைத்தவர்களை பொறுப்புக் கூறவைப்பதற்குப் பதிலாக, அவர்களின் சர்வதேச குற்றங்களுக்கு வெள்ளை அடிப்பதுடன், அவர்களைப் பிணை எடுப்பதாகவே அமைந்துள்ளது. 'தமது குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய தேவை இல்லை, தாம் தண்டனைக்கு உட்படுத்தப்படமாட்டோம்' என்ற துணிவை சிறிலங்கா அரச படையினருக்கு உண்டாக்கி, எதிர்காலத்திலும் தமிழர்களுக்கு எதிராக அட்டூழியங்களைத் தயக்கமின்றி மேற்கொள்வதற்கு, இந்தத்தீர்மானம் வழி ஏற்படுத்தியுள்ளது' என்ற உண்மையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது அறிக்கையில் தெளிவாக எடுத்துரைத்துள்ளது. ஆனாலும், தமிழ்த் தேசியத்தின் பெயரால் அரசியல் செய்யும் சில பிரதிகிருதிகள் இந்தத் தீர்மானம் ஆக்கபூர்வமானது என்று கூறுகின்றனர்.

இதுவரை காலமும் அரசியல் தீர்வு தொடர்பில் பேசப்பட்டாலும், "13"ஆவது திருத்தத்தின் நடைமுறையாக்கம், அதிகாரப் பகிர்வு என்பன தீர்மானத்தின் செயற்பாட்டு பந்திக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன. எனவே இது ஆக்கபூர்வமான தீர்மானம் என்று தம் தரப்பில் அவர்கள் வாதங்களை முன்வைக்கின்றனர். நல்லாட்சி அரசின் காலத்தில் 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கமும் இணை அனுசரணை வழங்கியிருந்தது. அதில் போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுப்பதற்கு கலப்புப் பொறிமுறை பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதனை இணை அனுசரணை வழங்கி ஏற்றுக்கொண்டுவிட்டு பின்னர் நிராகரித்து நடைமுறைப்படுத்தாமல் இருந்தது சிறிலங்கா அரசாங்கம். அதற்கு எதிராக எந்தவொரு துரும்பையும் சர்வதேச சமூகத்தால் அசைக்க முடியவில்லை. இந்த நிலையில் இப்போதைய வலுக்குன்றிய தீர்மானத்தில் அரசியல் தீர்வு என்பது செயற்பாட்டு பந்திக்குள் உள்ளடக்கப்படுவதால் மாத்திரம் எதுவும் நடக்கப்போவதில்லை. இலங்கை அரசாங்கம் தீர்மானத்தை நிராகரித்துள்ள நிலையில், இலங்கையைக் கட்டுப்படுத்துவதற்கான எந்தவொரு பொறிமுறையும் இல்லாத மனித உரிமைகள் பேரவையால் எந்த ஆணியையும் பிடுங்கமுடியாது. இலங்கையை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்தவேண்டும் என்ற தமிழர் தரப்பின் கோரிக்கை எப்போது நிறைவேற்றப்படுகின்றதோ அப்போதே போர்க்குற்றங்களுக்கான நீதி மாத்திரமல்ல, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் கிட்டும்.

## நாளொரு நல்வார்த்தை

" கடமைகளை மகிழ்ச்சியுடன் செய்பவனுக்கு வாழ்வில் அதிருப்தியே கிடையாது!"

- லவேட்டர்



# இழுபறியில் 22ஆவது திருத்தம் ஒத்திவைக்கப்பட்டது விவாதம்

**கொழும்பு, ஒக்.7**

**நாடாளுமன்றத்தில் நேற்றும் இன்றும் நடைபெறவிருந்த அரசமைப்புக்கான 22 ஆவது திருத்தச் சட்ட வரைவு மீதான விவாதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது மேற்படி சட்ட வரைவு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.**

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30. மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

ஜனாதிபதியின் உரை முடிவடைந்த பின்னர், அந்த உரை தொடர்பில் சபையில் விவாதமொன்று அவசியம் என மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான மதுர விதானகே கோரிக்கை விடுத்தார். விவாதம் நடத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்படும் என சபை முதல்வரான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார். அப்போது எழுந்த எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல,

"விவாதம் இன்று (நேற்று) நடத்தப்படுமா?" எனக் கேட்டார்.

"எதிரணி உடன்பட்டால், அதற்கு அரசாங்கமும் தயார். என சபை முதல்வர் பதிலளித்தார்.

"அப்படியானால் 22 ஆவது திருத்தச் சட்ட வரைவு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாதா...?" என லக்ஷ்மன் கிரியல்ல கேள்வி எழுப்பினார். இதற்கு சபை முதல்வர் நேரடிப் பதிலை வழங்கவில்லை.

இதன்போது எழுந்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன, 22 ஆவது திருத்தச்சட்ட வரைவின் தற்போதைய நிலை பற்றியும், கடந்த கால நகர்வுகள் சம்பந்தமாக விவரித்ததுடன், தாமதத்துக்கு எதிரணிதான் காரணம் என்ற தொனியில் கருத்து வெளியிட்டார்.

இந்தக் குற்றச்சாட்டை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நிராகரித்தார். "22 ஆவது திருத்தச்சட்ட வரைவு 20 ஆவது திருத்தச் சட்டம்போல் இருக்கக்கூடாது, அது 19 இல் இருந்த நிலைபோல அமைய வேண்டும்" என வலியுறுத்தினார்.

அதையடுத்து ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் அது சம்பந்தமாக கருத்து வெளியிட்டனர். "இன்று (நேற்று) முற்பகல் 11 மணிக்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி முடிவெடுக்கலாம்" என சபாநாயகர் குறிப்பிட்டார்.

அதன்படி கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. அதன்பின்னரே, 22 இம்முறை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது எனவும், அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் சபாநாயகர் அறிவித்தார்.

ஒக்ரோபர் மாதத்துக்கான இரண்டாம்வார நாடாளுமன்றக் கூட்டத்தொடர் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகி, 21 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. அதேவேளை, 22 ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பில் ஆளுங்கட்சிக்குள்ளும் இன்னும் உறுதியானதொரு நிலைப்பாடு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-44)

## பாவனைக்கு உதவாத அரிசி; உணவகங்களுக்கு விநியோகம்

பாவனைக்கு உதவாத அரிசியை இரவு நேர உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு விநியோகிக்கும் வர்த்தகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பேருவளை பொலிஸ் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்ட தேடுதலின்போது இந்த சட்டவிரோத வர்த்தகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பாவனைக்கு உதவாத 16 ஆயிரம் கிலோ கிராம் அரிசி கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குறித்த அரிசி வெல்லம்பிட்டி பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

**நாளை**

**08.10.2022**
சனிக்கிழமை
புரட்டாதி - 21

சுபநேரம் : 03.02 - 04.32
ராகுகாலம்: 09.02 - 10.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் தமிழ்க் கிராமங்களை விழுங்கப் போகும் மகாவலி வலயம்!

*மீண்டும் நடவடிக்கை என்று விசனிக்கிறார் சாள்ஸ் எம்.பி.*

கொழும்பு, ஒக். 7

**மகாவலி வலயம் என்ற பெயரில் வடக்கில் நிலங்களை தந்திரமாக அபகரிக்கும் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிலையியல் கட்டளைகள் திருத்தம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரதேசத்துக்குரிய கோத்தாபய கடற்படை முகாம் காணி தொடர்பில் இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது. அந்த முகாம் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உருவாக்கப்பட்டது. அரச, தனியார் காணிகள் அடங்கலாக 671 ஏக்கர் நிலத்தை அங்கே கடற்படை தம்வசம் வைத்துள்ளது. அங்கு தனியார் காணிகளை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்தபோதும், அதற்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை.

அங்கு மக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் போராட்டங்களால் நிலஅளவை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டபோதும், கொழும்பில் இருந்து செல்லும் அதிகாரிகளைக் கொண்டு அந்தக் காணிகளை அளந்து கையகப்படுத்த முயற்சிக்கப்படுகின்றது. இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 6 கிராமஅலுவலர் பிரிவுகளை மீண்டும் மகாவலியுடன் இணைக்கும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளது. முன்னர் அமைச்சராக இருந்த சமல் ராஜபக்சவுக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைய அந்த நடவடிக்கைகளை அவர் இடைநிறுத்தியிருந்தார். ஆனால், மீண்டும் அந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

புதிய ஜனாதிபதியை நாடாளுமன்றம் தெரிவு செய்த பின்னர், எங்கள் கட்சியினர் அவரைச் சந்தித்தபோது அரசியல் கைதிகளின் விடுதலை, மகாவலி வலய விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கூறியிருந்தேன். அப்போது தனது செயலாளருக்கு அதுதொடர்பான அறிக்கையை தன்னிடம் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கூறியிருந்தார். ஆனால், எதிர்வரும் நாள்களில் வர்த்தமானி அறிவித்தல்மூலம் குறித்த பகுதிகளை மகாவலியுடன் இணைக்க முயற்சிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை, ஸ்திரமற்ற அரசு போன்ற நெருக்கடி நிலைமைகள் இருக்கையில் வடக்கில் நிலங்களை தந்திரமாக அபகரிக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இதனால் மகாவலி எல் வலயம் தொடர்பான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துவதற்கு ஜனாதிபதியும், அவரின் செயலாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், அங்கு பூர்வீகமாக உள்ள மக்களுக்கு அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ஒ-22)

சட்டவிரோத மீன்பிடிக்கு அனுமதி கோரிய

## முல்லைத்தீவுப் போராட்டம் சட்டப்புறம்பான இழிசெயல்

### இலங்கைத் தொழிலாளர் சமூக கூட்டமைப்பு கண்டனம்

முல்லைத்தீவு, ஒக். 7

முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்குத் துணைபோகும் அதிகாரிகளை இடமாற்றக் கோரியும் சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்தக் கோரியும் நடைபெற்ற போராட்டத்துக்கு எதிராக சட்டவிரோத மீன்பிடிக்கு அனுமதியளிக்கும்படி நேற்றுமுன்தினம் ஏட்டிக்குப் போட்டியாகப் போராட்டம் மேற்கொண்டு கலகம் விளைவித்தமை நாட்டின் சட்டத்தைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இந்தச் சம்பவம் முழுமையாகக் கண்டிக்கப்படவேண்டியதொன்று.

இவ்வாறு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் திட்ட இணைப்பாளர் மற்றும் அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய ஏற்பாட்டாளர் அன்டனி ஜேசுதாஸன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில்,

சட்டவிரோத தொழில் நடவடிக்கையை கட்டுப்படுத்தக் கோரி, கடந்த 3ஆம் திகதி முதல் கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் நுழைவாயிலுக்கு அருகில் கூடாரம் அமைத்து தொடர் போராட்டத்தில் மீனவர்கள் ஈடுபட்டு வந்தனர்.

தென்பகுதியில் இருந்து வருகைதந்து கொக்கிளாய் சாலை பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்கள் அவர்களுக்கு எதிராக சட்டவிரோத மீன்பிடிக்கு அனுமதியளிக்கும்படி நேற்றுமுன்தினம் போராட்டத்தை ஆரம்பித்து இடையூறு விளைவித்துள்ளனர். இவர்களின் பின் அரசியல் பலம் ஒன்று செயற்படுவது தெளிவாகத் தெரிகிறது.

சட்டவிரோத மீன்பிடியை ஊக்குவிக்க துணைப்போகும் அரசியல்வாதிகள் மறைமுகமாகச் செயற்படுகின்றார்கள். சட்டவிரோத தொழில்களை தடை செய்யவேண்டிய கடற்றொழில் அதிகாரிகளே இதற்குத் துணைபோகின்றார்கள் .

இதுதொடர்பில் அரசு மற்றும் கடற்றொழில் அமைச்சு உடனடியாக சரியான தீர்வொன்றை வழங்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-7)

## மண்டைதீவு கக்கடதீவில் பூச்சிகொல்லிகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ்ப்பாணம், மண்டைதீவுக்கு அருகிலுள்ள கக்கடதீவில் பூச்சிகொல்லி மருந்துகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்தத் தீவில் பூச்சிகொல்லி மருந்துகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என கடற்படை புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதில் ஒரு தொகுதி பூச்சிகொல்லி மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் இவை இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கடற்படையினர் முன்னெடுத்துள்ளனர். (ச-20)



## எரிபொருள் நிரப்பிய மோ.சைக்கிளில் தீ!

*வவுனியாவில் சம்பவம்*

வவுனியா, ஒக். 7

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு எரிபொருள் நிரப்பிய வேளை மோட்டார் சைக்கிளில் திடீரென தீ பற்றியது.

இந்தச் சம்பவம் வவுனியா ஹொரவப்பொத்தானை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

எரிபொருள் நிலையத்தில் வரிசையின் அடிப்படையில் எரிபொருள் நிரப்பிக்கொண்டிருந்தவேளை, நபரொருவர் மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் நிரப்பச் சென்றார். மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் நிரப்பிக்கொண்டிருந்தபோதே மோட்டார் சைக்கிளின் எரிபொருள் தாங்கியிலிருந்து திடீரென தீ பற்றியது.

அதனையடுத்து எரிபொருள் நிலைய ஊழியர்கள் உடனடியாகச் செயற்பட்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (எ-14,18)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சி ஒன்றில் லாபம் காண்பீர்கள். நீண்டநாள் எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும். வியாபாரத்தில் புதிய அணுகுமுறையைக் கையாளுவீர்கள். நிதிநிலை உயரும்.

**இடபம்:** வியாபாரத்தை விரிவு செய்ய திட்டமிடுவீர்கள். நண்பர்களின் ஒத்துழைப்பு நலம் தரும். தடைப்பட்ட செயல்களை இன்று மீண்டும் தொடர்வீர்கள். உங்கள் முயற்சி வெற்றியாகும்.

**மிதுனம் :** இரண்டு நாள்களாக இருந்த நெருக்கடிகள் விலகும். முயற்சி லாபமாகும். எதிர்பார்த்த நல்ல செய்தி வீடுதேடி வரும். உங்கள் செல்வாக்கு உயரும். குழப்பம் தீரும்.

**கடகம்:** செயல்களில் கவனம் தேவை. புதிய முயற்சிகள் வேண்டாம். மற்றவரை நம்பிச் செய்யும் செயல் இழுபறியாகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** நண்பர்களின் ஒத்துழைப்புடன் திட்டமிட்ட செயல்களை செய்து முடிப்பீர்கள். தம்பதி இடையே இருந்த சங்கடம் தீரும். ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வீர்கள். பாராட்டுப் பெறுவீர்கள்.

**கன்னி:** உயர்ந்த இடத்தில் இருப்பவர்களை சந்திப்பீர்கள். முயற்சி ஒன்று லாபமாகும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உறவினர்களின் ஆதரவு உண்டு.

**துலாம்:** பூர்வீக சொத்துப் பிரச்சினை மீண்டும் தோன்றும். பேச்சில் நிதானம் அவசியம். முயற்சியில் முழுமையாக ஈடுபட்டாலும் முடிவு உங்களுக்கு எதிர்மறையாகும். சேமிப்பில் கவனம் செல்லும்.

**விருச்சிகம்:** எதிர்பார்ப்பு ஒன்று தள்ளிப்போகும். குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். அனுகூலம் காண்பீர்கள்.

**தனுசு:** துணிச்சலுடன் செயற்பட்டு நீங்கள் எண்ணிய செயலைச் செய்து முடிப்பீர்கள். பணியாளர்கள் ஒத்துழைப்புடன் தொழிலை விரிவு செய்வீர்கள். நிதிநிலை உயரும்.

**மகரம்:** உறவினர் ஆதரவுடன் நீண்ட நாள் பிரச்சினை ஒன்றில் முடிவு காண்பீர்கள். கேட்ட இடத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் ஏற்பட்ட சங்கடம் விலகும்.

**கும்பம்:** வேலைகளின் காரணமாக சலிப்பு மேலிடும். செயல்களில் குழப்பம் ஏற்படும். மற்றவர்கள் உங்களை அலட்சியம் செய்வதாக நினைத்து வருந்துவீர்கள். அலைச்சல் கூடும்.

**மீனம்:** அலைச்சல் அதிகரிக்கும். எடுத்த வேலையை முடிக்க முடியாமல் சங்கடப்படுவீர்கள். பணியிடத்தில் சில பிரச்சினைகளை சந்திக்க வேண்டி வரும். செயல்களில் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர் மாற்றம்

இல. 205. சாரதாம்பாள் கோவிலடி. மாயவனூர். வட்டக்கச்சியைச் சேர்ந்த **செல்லையா சந்திரா** ஆகிய நான் இன்றுமுதல் **நவரத்தினம்** என மாற்றியுள்ளேன். இனிவரும் காலங்களில் அனைத்து ஆவணங்களிலும் **நவரத்தினம்** என்று பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS 1035) (3/6) **நவரத்தினம்**



# விலை மனு கோரல்

## நாவலர் தர்மகர்த்தா சபை

யா/ வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள நால்வர் ஆலயம் புனரமைப்பு செய்யப்படவுள்ளது. திருத்த வேலைக்கான விலைமனு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தர்ம கர்த்தா சபையினரால் கோரப்படுகிறது.

விண்ணப்பிப்பவர்கள் பாடசாலை நேரத்தில் அதிபருடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**விண்ணப்பிப்பதற்கான இறுதி திகதி 15.10.2022**

**முகவரி : யா/ வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்**
**நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

**செயலாளர்**
**நாவலர் தர்மகர்த்தா சபை**

(CS 21111) (3/6)

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
11 . 07 . 1950



விண்ணில்
05 . 10 . 2014

## அமரர் செல்லத்துரை கணநாதன்

**திதி: புரட்டாதி மாத பூர்வபக்க துவாதசி**

அன்பின் திருவுருவே!
எட்டமுடியாத தொலைவு சென்று
ஆண்டு எட்டு ஆனதே
ஆண்டு எட்டு அல்ல ஓராயிரம் ஆனாலும்
நெஞ்சில் பதிந்த உம் நினைவலைகள்
என்றென்றும் நம்மை விட்டு நீங்காது

**உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்**

**"தர்மகிரி" அம்மன் கோயிலடி,**
**அராலி கிழக்கு, அராலி.**

(CS 46950) (3/6)

**நீங்கா நினைவுடன்**
**குடும்பத்தினர்**

# நெஞ்சம் நெகிழும் நினைவலைகளின் 17ஆம் ஆண்டு

அன்னை மடியில்
22 - 08 - 1984



இறைவன் அடியில்
07 - 10 - 2005

## செல்வி மாதவராஜா தனுஷா

**(2ஆம் வருட கலைப்பீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம், பழைய மாணவி, மகளிர் மகா வித்தியாலயம் – வவுனியா)**

**திதி : சதுர்த்தி**

கண்ணை இழந்திருந்தால்
காலம் செய் விதியென்போம்
பொன்னை இழந்திருந்தால்
போகட்டும் என்றிருப்போம்
உன்னை இழந்திருந்த
உலகத்தில் வாழ்வதென்றால்
என்னென்று ஆகுமம்மா
ஏனம்மா எமைப் பிரிந்தாய்.

(CS 21014) (3/6)

**பொ. மாதவராஜா**
**அண்ணாவி வளவு,**
**கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.**

**என்றும் மீளாத்துயருடன்,**
**பெற்றோர், தம்பி.**
**021 224 2046**

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு, தொல்புரம் கிழக்கு பகுதியில் வசிக்கும்105 வயதுடைய செல்லத்துரை சரஸ்வதி என்ற மூதாட்டி, வலி.மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரனால் கௌரவிக்கப்பட்டுள்ளார். (ய-27)




# பெயர் மாற்றம்

உடுவில் தெற்கு. பாலாவோடை. மானிப்பாயில் வசிக்கும் **துஷ்யந்தன் கலாநிதி** ஆகிய நான் எனது பெயரை **துஷ்யந்தன் கலாநிதி மாறன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **துஷ்யந்தன் கலாநிதி மாறன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிசக் குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(CS 21108) (3/6) **துஷ்யந்தன் கலாநிதி மாறன்**

# உடனடி வேலை வாய்ப்பு

மிருசுவிலில் உள்ள Tokyo Cement Company இற்கு Electrician வேலைக்கு ஆட்கள் தேவை.

**தகைமை :** 3 பேஸ் தொடர்பான அறிவு. குறைந்த பட்சம் இரண்டு வருட அனுபவம்.

**077 160 7804** (CS 960) (3/6)

# அபிவிருத்தித் திட்டங்களில் தமிழ் மக்கள் புறக்கணிப்பு!

*தவராசா கலையரசன் எம்.பி.*
*நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு*

மட்டக்களப்பு, ஒக். 7

அம்பாறை மாவட்டத்தில் அபிவிருத்தி ரீதியிலான திட்டங்களின்போது திட்டமிட்ட வகையில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அம்பாறை மாவட்ட அலிகம்பை, கண்ணகி கிராமம் ஆகிய இடங்களில் குடிதண்ணீர் பிரச்சினை தீர்க்கப்படாத நீண்டகாலப் பிரச்சினையாகவே தொடர்கின்றது.

இந்தப் பகுதியில் வாழும் மக்களுக்குத் தூய்மையான குடிதண்ணீரை விநியோகிப்பதற்கான திட்டம் 2017ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டது. இருப்பினும் இதுவரை அந்த அபிவிருத்தித் திட்டம் முழுமை பெறவில்லை. அபிவிருத்திப் பணிகள் மற்றும் இடைநிறுத்தப்பட்டுள்ள நீர்தாங்கி புனரமைப்பு தொடர்பில் சபையில் கேள்வி எழுப்பும் போது நிதியில்லை என்ற பதில் மாத்திரமே வழங்கப்படுகின்றது.

அலிகம்பை மற்றும் கண்ணகி கிராமம் ஆகிய இடங்களில் 70 சதவீதம் தமிழர்களும், 30 சதவீதம் முஸ்லிம்களும் வாழ்கின்றார்கள். தமிழர் குறைவாக வாழும் பகுதிகளில் குடிதண்ணீர் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நூறு சதவீதமளவில் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டில் எந்த அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டாலும் அங்கு தமிழ்ச் சமூகம் புறக்கணிக்கப்படுகின்றது. ஆகவே, அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசு உரிய நடவடிக்கை எடுப்பது அவசியம் - என்றார். (ச-22)

## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் - வடக்கு மாகாணம்

# தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்

வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில், அச்சுவேலி பிரதேசத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தில், அனிஞ்சியன்குளம் பிரதேசத்திலும், வவுனியா மாவட்டத்தில், செக்கட்டிப்புலவு, பூந்தோட்டம் ஆகிய பிரதேசங்களிலும் காணப்படும் பிராந்திய கால்நடை இனவிருத்திப் பண்ணைகளில் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக, தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

01. நியமிக்கப்படவுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை : 19
02. நியமிக்கப்படவுள்ள தொழிலாளர்களின ஒப்பந்த காலம் : 1 வருடம்
03. ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகமைகள்
    - I. நன்நடத்தையுடையவராகவும், சிறந்த ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
    - II. அரச கால்நடைப் பண்ணை அல்லது கால்நடைத்துறை அலுவலகம் அல்லது அதுசார்ந்த வெளிக்களப் பணியொன்றில் முன்னனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
    - III. கல்வித் தகைமை : - க.பொ.த. சாதாரண பரீட்சையில் இரண்டு அமர்விற்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
04. அச்சுவேலி, அனிஞ்சியன்குளம், செக்கட்டிப்புலவு, பூந்தோட்டம் ஆகிய பிரதேசத்தில் வசிப்பவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும். (வதிவிடம் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)
05. விண்ணப்பிக்கும் முறை
    - I. பதவிக்கான விண்ணப்பப் படிவங்கள் எமது அலுவலகங்கள் அமைந்துள்ள அச்சுவேலி, அனிஞ்சியன்குளம், செக்கட்டிப்புலவு, பூந்தோட்டம் ஆகிய இடங்களில ரூபா 20 செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும்.
    - II. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2022.10.31 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில்
      மாகாணப் பணிப்பாளர்
      கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
      வடக்கு மாகாணம்
      யாழ்ப்பாணம்.
      என்று முகவரியிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
    - III. இதற்குரிய நேர்முகப்பரீட்சை 09.11.2022 ஆம் திகதியன்று காலை 9.00 மணியளவில் மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், இல-135, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம், எனும் முகவரியில் இடம்பெறும். நேர்முகப் பரீட்சையின் போது, பின்வரும் ஆவணங்கள் தவறாது சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், உரிய திகதியில் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்காதுவிடின் தாங்கள் இந்நியமனம் தொடர்பான விருப்பு அற்றவராக கருதப்படுவீர்கள். அத்துடன் நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வது வேலை கிடைக்கும் என்று கருத முடியாது என்பதையும் அறியத் தருகின்றோம்.
        1. கிராம சேவையாளரிடமிருந்து பெறப்பட்ட வதிவிட, குணநலச் சான்றிதழ்.
        2. தேசிய அடையாள அட்டை. (மூலப்பிரதி, நிழற்பிரதி)
        3. பிறப்புச் சான்றிதழ். (மூலப்பிரதி, நிழற்பிரதி)
        4. கல்வித் தகைமைச் சான்றிதழ்கள். (மூலப்பிரதி, நிழற்பிரதி)
        5. துறைசார் வேலை முன்னனுபவக் கடிதம்.
        6. சமூக மட்ட நிறுவனங்களுடன் இணைந்து வேலை செய்திருப்பின் அதற்கான சான்றிதழ்.
        7. ஏனைய பொருத்தமான ஆவணங்கள்.
06. இவ்வொப்பந்த அடிப்படையில் நியமனம் பெறுபவர்கள் எவ்வகையிலும் நிரந்தர நியமனம் பெற உரித்துடையவர்கள் அல்லர் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**Dr.S.வசீகரன்**
**மாகாணப் பணிப்பாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி



தவப்பேறு 18.06.1966

சிவப்பேறு 18.09.2021

எட்டுத்திக்கும் இசை மீட்டிய கலைமகன், நாட்டுக்காய் நம்மவர்க்காய் இசைத்தவன், கோவில் தோறும் அந்தக் கூத்தனுக்கும் இசைத்தவன்
இசையை விதைத்த வித்தகன்
லயஞான போதன்,
மிருதங்க கலாபூஷணம்

## அமரர் சதா. வேல்மாறன்

தலைவனே ! தந்தையே! குருவே! கலைஞனே!
ஒன்றல்ல ஓராயிரமாண்டானாலும் மறவோமே...!
நின் ஆன்மா பேரானந்தப் பெரும் பேறெய்த பிரார்த்திக்கும்.

82/4 , கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
021 221 7735, 074 099 5800

(CS 21114) (3/6)

# மரண அறிவித்தல்



அமரர் திருமதி

## சர்வானந்ததேவி சிவப்பிரகாசம்

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி சர்வானந்ததேவி சிவப்பிரகாசம் அவர்கள் 04.10.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா, ஞானபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும் காயத்திரி, லக்ஷ்மப்பிரியா (ஆசிரியை - சைவமங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கணேசன், சுதாகரன் (ICS Study, Abroad) ஆகியோரின் அன்பு மாமியாரும் தரணியாவின் அன்பு அம்மம்மாவும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், நடராசா, திருமதி பரமேஸ்வரி காசிப்பிள்ளை மற்றும் செல்வரட்ணம், பாக்கியநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி இராஜலிங்கம் மற்றும் சிவசுப்பிரமணியம், சண்முகா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் 09.10.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மதியம் 12.00 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று 2.00 மணியளவில் கனத்தை பொது மயானத்தில், தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு : 077 3013060
(சுதாகரன் - மருமகன்)

# சிறுவர்தின நிகழ்வு

யாழ்.ஒக். 7

அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் 105ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முதியோர் மற்றும் சிறுவர் தின நிகழ்வு அண்மையில் அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

சைவ வாலிபர் சங்கத் தலைவர் ஓய்வு நிலை மருந்தாளர் க.நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் கலந்து கொண்டார். நிகழ்வில் அளவெட்டி கிராமத்தின் முதுபெரும் ஓதுவாரும் ஓய்வுபெற்ற மருத்துவ சேவையாளருமான நாகலிங்கம் சபாரத்தினம் மூத்த சமயப் பணியாளர் என்ற வகையில் கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து கும்பிழாவளை முன்பள்ளியின் சிறார்களின் கலை நிகழ்வுகளும் பரிசில் வழங்கலும் நடைபெற்றன.

(ச)

# 4ஆம் ஆண்டு நினைவுகள்

குவலயத்தில் 22 . 05 . 1945



சிவமயத்தில் 23 . 09 . 2018

## அமரர் சின்னையா நடராஜலிங்கம்

ஓய்வுநிலை மாவட்ட முகாமையாளர் இலங்கை வங்கி , யாழ்ப்பாணம்.

எம் நிழல் போல் இருந்தவர் நீங்கள்
நினைவாய் மாறினீர்கள்! கண் இமைக்கும்
நேரத்தில் கண்ணீர் துளியாக்கினீர்கள்
உங்கள் ஆங்கில திறமையும் சிரித்த அழகுமுகம்
கண்டு நான்காண்டு ஆனதுவே!
எம்மை அன்புடன் அழைக்க நீங்கள் இங்கு
இல்லாது பரிதவிக்கின்றோம் நாம்! எமக்கு
ஆற்றும் வழிதேடுகின்றோம் ஆனால்
ஆறவில்லை எம் இதயம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் அழியாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்
என்றென்றும்.


குரும்பைகட்டி,
புலோலி வடமேற்கு.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 21109) (3/6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 22 . 06 . 1947



இறப்பு 07 . 09 . 2022

## தெய்வேந்திரம் நகுலேஸ்வரன்

திதி : அமாவாசை துவாதசி

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் அப்பா!
மீளாத்துயரில் உம் நினைவுகளுடன்
வழிகளும் ஏதும் உண்டோ
வையகம் மீண்டும் காண?

அன்னாரின் சபிண்டீகரண நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (07.10.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

புதுவீதி,
ஆறுகால் மடம்.

குடும்பத்தினர்
077 917 0357

(CS 21117) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### றங்கசாமி லீலாவதி

யாழ். பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட றங்கசாமி லீலாவதி நேற்று (06.10.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றங்கசாமி மீனாம்பாள் தம்பதியரின் அன்பு மகளும், கமலநாதன் காலஞ்சென்றவர்களான இராசநாதன், பத்மநாதன், சீதாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலினி, தயாநிதி மற்றும் காலஞ்சென்ற கோபாலகிருஸ்ணன் ஆகியோரின் மைத்துனியும், செல்வகுமார், மதனகோபன், புவிகரன் ஆகியோரின் அன்புச் சித்தியும், திவாகரன், றங்கதுளசி, துவாரகா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**19/8, கலைப்புலவர் வீதி,**
**பெருமாள் கோவிலடி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**பெறாமக்கள்**
**(077 329 5616)**

## மரணஅறிவித்தல்



### சிவசந்திரராசா தங்கபூபதி

**(ஓய்வுபெற்ற கணக்காளர் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் கைதடி)**

கைதடி தெற்கை பிறப்பிடமாகவும் கைதடிமேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசந்திரராசா தங்கபூபதி (ஓய்வுபெற்ற கணக்காளர் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் கைதடி) அவர்கள் (05.10.2022) புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லம்சின்னப்பிள்ளையின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா செல்லம்மாவின் மருமகளும் சிவசந்திரராசா (சின்னகந்தசாமி) அவர்களின் அன்புமனைவியும் சுகிர்தா (லண்டன்),சுமணா,கஜதீபன் (அஞ்சல் அலுவலகம் கைதடி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரெனிஸ்வரன் (லண்டன்) செந்தில் குமரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,கஸ்வின் (லண்டன்),சண்விகா (லண்டன்), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சிவபாக்கியம் ,கோகுலவதி ,கோமளவதி (சுவிஸ்) ,சிவசக்திவேல் (சுவிஸ்),கலாவதி (சுவிஸ்) காலஞ்சென்றவர்களான ஞானபூபதி ,ஞானசக்திவேல்,குகானந்த வேல் மற்றும் மகாநந்தவேல் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும். காலஞ்சென்றவர்களான பரஞ்சோதியம்மா ,ஞானகி அம்மா மற்றும் கோகனிநாதன் ,சண்முகரத்தினம் ,சுந்தரலிங்கம்,நிர்மலா ,சிவகுமார் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.10.2022)வியாழக்கிழமை பி.ப. 2.மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கஜதீபன் (மகன்) 0740203236**
**காந்தன் (பெறாமகன்) 0772940053**

**தகவல் குடும்பத்தினர்**

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்துள் உறைந்திட்ட எம் அன்னை.



மண்மகிழ் 26 . 03 . 1942

விண்மகிழ் 08 . 09 . 2022

### அமரர் விமலாதேவி சிவலிங்கராசா (சின்னக்கிளி)

**திதி:- புரட்டாதி திரியோதசி (08.10.2022-சனிக்கிழமை)**

கருணை பிறப்பின் வரமே! கனிவே வடிவான உருவே!
வல்வெட்டித்துறையில் வளர்த்தெடுத்த முத்தே!!
சந்நிதியானே கதி-என சரணடைந்த தாயே...
தியாக வாழ்வு கொண்ட திருவுருவே!
எல்லோரும் நலமுற்றிருக்க தினம் இறைவனை வேண்டும் தெய்வீகமே!
பற்றுதலாய் நம்பிக்கை பற்றி - அன்னை உன்மனம் தேடி
ஏங்குதம்மா?

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சிவபதமடைந்த எமது அன்னையின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (08.10.2022) சனிக்கிழமை இடம்பெற்று சின்னக்கடற்கரை சமுத்திர தீர்த்தத்தில் அஸ்தி கரைக்கப் படும். அதே தினம் மு.ப. 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் சபிண்டீகரண கிரியைகளிலும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சந்நிதி வீதி,**
**தொண்டைமானாறு.**

**குடும்பத்தினர்.**
**076 6479 635**

## புலமைப்பரிசில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 7

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தால் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டிக் கருத் தரங்கொன்று நாளை சனிக்கிழமை முன்னெ டுக்கப்படவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் நாளை காலை 8 மணி தொடக்கம் 12 மணிவரை இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-ம)

## பரிசில் நாள்

சாவகச்சேரி ஒக்.7

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு அதிபர் இ. நாகேந்திரன் தலைமையில் வித்தியா லய மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற் பகல் 1 மணிக்கு நடை பெறும். (ய-9)

*மின்னல்...*

ராகவன் (வயது - 34) என்பவரே உயிரி ழந்தவராவார்.

தோட்ட வேலைகளில் ஈடுபட்டுக் கொண் டிருந்தபோதே மேற்படி நபர் மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளார். இதை யடுத்து அவர் உடனடியாக மீட்கப்பட்டு தெல்லிப்பழை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவரைப் பரி சோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்க னவே உயிரிழந்துவிட்டார் என்று தெரி வித்தனர்.

இறப்புத் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மின்னல் தாக்கத்தால் உயிரிழப்போ ருக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் இழப்பீட்டு நிதியைப் பெற்றுக் கொடுப்ப தற்குரிய அனைத்து விவரங்களும் தெல் லிப்பழை பிரதேச செயலக உத்தியோகத் தர்கள் ஊடாக சேகரிக்கப்பட்டு இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித் தார். (அ-ம-26-27)

*சர்வதேச...*

தீர்மானம் தொடர்பிலேயே ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாறு வலியுறுத்தியுள் ளது.

ஜனநாயக விழுமியங்கள், மனித உரி மைகள், சட்டத்தின் ஆட்சி குறித்து அனைவரையும் உள்வாங்கும் கலந்து ரையாடல்களுக்கு முழுமையான ஆதர வளிப்போம் என்றும் ஐரோப்பிய ஒன்றி யம் தெரிவித்துள்ளது. (அ-ம)


## தவறவிடப்பட்டது

யாழ்ப்பாணம் / முக்கொம்பன் இடைப்பட்ட தூரத்தில் LH 1683 எனும் நம்பர்தகடு தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவுமாறு தாழ்மை யுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**077 6544 428**

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் உள்ள தமிழ் குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலை செய்யக்கூடிய தமிழ் பெண் தேவை.

தொடர்புகட்கு: **077 3866 250**


## 6ஆம் மாத நினைவும் 72ஆவது பிறந்த தினமும்

தோற்றம் 08 . 10 . 1950

மறைவு 14 . 04 . 2022



### அமரர் நடராசா மகாலிங்கம்

திதி-திரயோதசி

மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்முன் தெரியும் நின்னுருவம்
எம்முள் எந்நாளும் உயிர்வாழும்

பட்டினசபை வீதி, மானிப்பாய். குடும்பத்தினர்.

CS 21119) 1-6

*சித்தவைத்தியரின்...*

திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி யுள்ளனர்.

இரண்டு தங்க மோதிரங்கள், 53 ஆயிரம் ரூபா பணம், பெறுமதி வாய்ந்த ஓர் அலைபேசி என்பனவே இவ்வாறு திருடப் பட்டுள்ளன. இது தொடர்பில் ஜெயபுரம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட் டதை அடுத்து, இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

*கல்மடுநகர்...*

நேற்று அதிகாலை இந்தத் திருட்டுச் சம்ப வம் இடம்பெற்றுள்ளது. பெறுமதிமிக்க பொருள்களுக்கு மேலதிகமாக மோட்டார் சைக்கிளில் இருந்த பெற்றோலையும் திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர். காலையில் தூக்கத்தி லிருந்து எழுந்து பார்த்த வீட்டின் உரிமையாளர்கள் தமது உடைமைகள் திருடப்பட்டமை குறித்து, தருமபுரம் பொலிஸாரிடம் முறையிடப்பட் டதை அடுத்து, பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (அ-ம-113-125)

*ஐ.நா....*

பதிவுசெய்தது.

இந்தத் தீர்மானம், தொடர்புடைய நாட்டின் (இலங்கையின்) இணக்கம் இல்லாமல் உரு வாக்கப்பட்டுள்ளது.

ஆதலால் இந்தத் தீர்மானத்தை அரசியல் மயமாக் கலின் விளைவு என்றே சீனா கருதுகின்றது. இலங்கையின் சுதந்திரத்துக்கு சீனா என்றும் துணை நிற்பதுடன் தனது உறுதியான ஆதரவையும் வழங்கும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் பேரவைக் கான சீனப் பிரதிநிதி தெரிவித் தார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கொடிகாமம் - கச்சாய் மகா வித்தியாலயத்தில் வாணி விழா நிகழ்வு அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது. (ய-159)



நவராத்திரி விரதத்தின் இறுதிநாளான விஜயதசமி உற்சவத்தை முன்னிட்டு, தெல்லிப்பழை தோதரை அம்மன் ஆலயத்தில் மானம்பு உற்சவம் நேற்று இடம்பெற்றது. (ய-27)



ஊரெழு கணேச வித்தியாசாலையில் அண்மையில் வாணி விழா சிறப்பாக இடம்பெற்றது. (ச)



சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் வாணி விழா கலைமகள் கலையரங்கில், நிலையத்தின் தலைவர் வடிவேலு கோகுலநேசன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இதன்போது மாணவர்கள், இளைஞர்களின் இசை நிகழ்வுகள் பண்பாட்டை வெளிப்படுத்துமுகமாக இடம்பெற்றன. (ய-125)





# வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக். 7

அராலி கலைமகள் சனசமூக நிலையத்தில் வாணி விழா நேற்று மாலை கலைநிகழ்வுகளுடன் சிறப்பாக இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்துகொண்டார். மாணவர்களின் கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து உயர்தரப் பரீட்சை, சாதாரணதரப் பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் அராலி கலைமகள் சனசமூக நிலையத்தினர், சமூகமட்ட அமைப்பின் பிரதிநிதிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-125)



கைதடி குருசாமி வித்தியாலயத்தின் வாணி விழாவும் பார்வையாளர் அரங்கத் திறப்பு விழாவும் அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நவராத்திரி போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன், கலை நிகழ்வுகளும் ஏடு தொடக்கும் வைபவமும் இடம்பெற்றது. (ய-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை சர்வதேசம் ஒருபோதும் நம்பப்போவதில்லை!

## முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



'சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதியை இலங்கை அரசாங்கம் மீறியுள்ளதால், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தொடர்பிலும் சர்வதேச சமூகத்துக்கு நம்பிக்கை ஏற்படாது' என்று சட்டத்துறைப் பேராசிரியரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

'கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது, நானே வெளிவிவகார அமைச்சராகச் செயற்பட்டேன். அப்போது பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக மறுசீரமைக்கப்படும் எனவும், அதுவரை அந்தச் சட்டம் பயன்படுத்தப்படமாட்டாது எனவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு உறுதி வழங்கப்பட்டது. ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய மிகவும் பொறுப்புடன் அந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

ஆனால், அந்த உறுதிமொழி அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது. பயங்கரவாதத்துடன் தொடர்புபடாத விடயங்களுக்கும் பயங்கரவாதத்தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. இதன் தாக்கமே இம்முறை ஜெனிவாவில் எதிரொலித்தது. அதாவது வாங்கிக்கட்டிக்கொண்டுள்ளோம் எனலாம். சர்வதேச சமூகத்துக்கு வாக்குறுதி வழங்கினால் அதனை நிச்சயம் நிறைவேற்ற வேண்டும். நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கக்கூடாது. அவ்வாறு வழங்கினால் சர்வதேச சமூகம் எமது நாட்டின் மீது நம்பிக்கை இழக்கும். ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள வாக்குறுதி மீறப்பட்டுள்ளதால், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு குறித்தும் ஐயப்பாடே நிலவும்' - என்றார். (அ-ம-44)

---

### அடுத்த...

விவசாயத்துறை தொடர்பில் துரிதமாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களால் கடந்த போகத்தில் எதிர்பார்த்ததை விட அதிக அறுவடையைப் பெற முடிந்துள்ளது. அடுத்தபோகத்துக்காக அனைத்தும் தயார் நிலையிலுள்ளன. உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக துரித உணவு உற்பத்தி வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-22)

### அர்த்தமான...

வாக்கெடுப்பு நேற்று இடம்பெற்றது. வாக்கெடுப்புக்கு முன்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இந்தியாவின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி இந்திர மணிபாண்டே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அருகிலுள்ள அயல்நாடு என்ற அடிப்படையில் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் மறுவாழ்வு, மீள்குடியேற்றம், நிவாரணம் மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்கு இந்தியா பெருமளவு உதவியை வழங்கியுள்ளது. ஜனவரிக்கு பின்னர் இலங்கை மக்கள் சமீபத்தைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு இந்தியா முன்வந்து முன்னர் ஒருபோதும் இல்லாத உதவியை வழங்கியுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தும் விடயத்தில் இந்தியா எப்போதும் தமிழ்மக்களின் சமத்துவம், நீதி, கௌரவம், அமைதி, ஐக்கியம் ஆகிய அபிலாஷைகளுக்கு ஆதரவளித்தல் இலங்கையின் இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கு ஆதரவளித்தல் என்ற இரு அடிப்படை கொள்கைகளால் வழிநடத்தப்பட்டுள்ளது.

'13'ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துதல், அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வு, மாகாணசபைத் தேர்தல்களை முன்கூட்டியே நடத்துதல் குறித்த இலங்கை அரசாங்கத்தின் உறுதிமொழிகளை நாங்கள் கருத்தில் எடுத்துள்ளோம். இது தொடர்பான முன்னேற்றம் போதுமானதல்ல என நாங்கள் கருதுகின்றோம். இதனடிப்படையில் இந்த உறுதிமொழிகளை விரைவில் நடைமுறைப்படுத்துவது குறித்து அர்த்தபூர்வமாக இலங்கை அரசாங்கம் செயற்பட வேண்டுமென நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

அனைத்து இலங்கையர்களுக்கும் பொருளாதார செழிப்பை ஏற்படுத்துவதும், இலங்கையில் தமிழ் மக்களின் கௌரவம், அமைதி மற்றும் பொருளாதார வளம் ஆகியவற்றுக்கான நியாயபூர்வமான அபிலாஷைகளை நிறைவேற்றுவதும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். இலங்கையில் தமிழர்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளை நிறைவேற்றுவது அனைத்து இலங்கையர்களுக்குமான பொருளாதார செழிப்பு ஆகியவற்றை உறுதி செய்வதற்காக இந்தியா, இலங்கை மற்றும் சர்வதேச சகாக்களுடன் இணைந்து செயற்படும் - என்றார். (அ-ம)

### சிறிலங்காவுக்கு...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வு ஜெனிவாவில் கடந்த மாதம் மத்திய பகுதியில் ஆரம்பித்து இடம்பெற்றுவந்தது. கடந்த 23ஆம் திகதி இலங்கை அரசாங்கத்துக்கு 'எதிராக' மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இலங்கை தொடர்பான தீர்மானம் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற புதிய வரைவின் கீழ் முன்வைக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, மலாவி, ஜேர்மனி, வடக்கு மசிடோனியா மற்றும் மொண்டினீக்ரோ நாடுகள் இணை அனுசரணை வழங்கியிருந்தன.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக எந்தவிதமான கடுமையான - காத்திரமான நடவடிக்கைகளும் அல்லாமல் வெறும் அவகாசத்தை கொழும்புக்குப் பெற்றுக் கொடுக்கும் வகையிலேயே இந்தத் தீர்மானம் அமைந்திருந்தது. இலங்கை அரசாங்கம் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை வலுப்படுத்தவேண்டும் என்றும், அது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் கண்காணித்து அறிக்கையிடவேண்டுமென்றும் இலங்கைக்கு எதிரான இந்தத் தீர்மானம் வலியுறுத்துகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது மற்றும் 55ஆவது அமர்வில் இலங்கைக்கு வழங்கப்பட்ட அவகாசம் தொடர்பான வாய்மொழிப் புதுப்பித்தல்களையும், 54ஆவது அமர்வில் எழுத்துமூலப் புதுப்பித்தல்களையும் வழங்க வேண்டுமென்றும் 2024 ஆம் ஆண்டு இடம்பெறும் 57ஆவது அமர்வின்போது இலங்கை விவகாரம் தொடர்பில் முழுமையான விவாதம் இடம்பெறும் என்றும் புதிய தீர்மானம் தெரிவிக்கின்றது.

தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பான வேணவாக்களையும், எதிர்பார்ப்புகளையும், விருப்பங்களையும் உள்ளடக்காத இந்தத் தீர்மானத்துக்கு தமிழர் தரப்பிலிருந்து எதிர்ப்பும் ஏமாற்றமும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த தீர்மானம் (அவகாசம்) 13 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்துக்கு ஆதரவாக (இலங்கைக்கு எதிராக) 20 வாக்குகளும், தீர்மானத்துக்கு எதிராக (இலங்கைக்கு ஆதரவாக) 7 வாக்குகளும் செலுத்தப்பட்டன. இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. (அ-ம)

### ரயிலுடன்...

விபத்தில் உயிரிழந்தவர் யார் என்று நேற்றிரவுவரை அடையாளம் காணப்படவில்லை. எனினும் அவர் 30 வயது மதிக்கத்தக்கவர் என்றும் வெள்ளை நிற சேட் மற்றும் காற்சட்டை அணிந்திருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-20-26)

### முரண்பாடுகளை...

மாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான நான்கு கட்ட மூலோபாயத் திட்டத்தை அறிமுகப்படுத்திய ஜனாதிபதி, முதல் கட்டம் வெற்றியடைந்துள்ளது எனவும், இரண்டாவது கட்டத்துக்கான அடித்தளம் தயாராகி வருகின்றது எனவும் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையொன்றை நிகழ்த்தினார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜப்பான் - பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கான விஜயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, கடன் மறுசீரமைப்புப் பணிகளில் மத்தியஸ்தராக ஜப்பான் முன்னிலை வகிக்க உடன்பட்டிருப்பது நல்லதொரு அறிகுறி எனவும், கடன் வழங்கிய நாடுகளின் மாநாட்டின் இணைத் தலைமை பொறுப்பை ஜப்பானுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்தார். கடன் வழங்கியுள்ள இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட முக்கியமான நாடுகளுடனும், ஏனைய கடன் வழங்குனர்களுடனும் நடத்தப்படும் பேச்சின் முன்னேற்றம் தொடர்பிலும் மிக விரைவில் அவர்களுடன் பலதரப்பு இணக்கப்பாட்டை எட்டுவது குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

அத்துடன், சிங்கப்பூர் பிரதமர் லீ ஷென் லோனுடன் நடைபெற்ற பேச்சு தொடர்பில் நாடாளுமன்றத்தில் விளக்கமளித்த ஜனாதிபதி, கடந்த காலத்தில் கைவிடப்பட்ட சிங்கப்பூர் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மீண்டும் புத்துயிர் பெறச் செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தினார். அதன் ஊடாக சிங்கப்பூருடன் நிலையான பொருளாதார அணுகுமுறையை ஏற்படுத்துவதன் வாய்ப்பு தொடர்பாகவும், தென்கிழக்காசியாவுடனான நாட்டின் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறு பற்றியும் ஜனாதிபதி எடுத்துரைத்தார். (அ-ம-22)

### ஐ.நா.வின்...

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து உரையாற்றுகையிலேயே வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை தொடர்பான புதிய தீர்மானம் இலங்கையின் அனுமதியோ அல்லது ஆலோசனையோ இன்றி முன்வைக்கப்பட்டுள்ளது. இதை இலங்கை திட்டவட்டமாக நிராகரிக்கின்றது. இந்தப் புதிய தீர்மானத்தை இலங்கை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது' - என்றார். (அ-ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமி வன்புணர்வு முதியவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 7

13 வயதுச் சிறுமியை வன்புணர்வுக்குட் படுத்திய குற்றச்சாட்டில் 73 வயோதிபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் நேற் றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

13 வயதுச் சிறுமி ஒருவர் வயோதிபரால் வன்புணர்வுக்கு உள்ளாக்கி கர்ப்பமாகி உள்ளார் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கடந்த வாரம் அறி விக்கப்பட்டிருந்தது. அதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, கோப் பாய் பொலிஸாருக்கும் இது தொடர்பில் அறிவித்தது. இதையடுத்து விசாரணை களை முன்னெடுத்த கோப்பாய் பொலி ஸார் குறித்த வயோதிபரை கைது செய் தனர். அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமி யிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் மருத்துவ பரிசோதனைக்கு அவரை முற்படுத்தியுள்ளனர். (அ-ம-26)

சித்தன்கேணியில்

## பணம், கணினி அபேஸ்!

யாழ்ப்பாணம், ஒக். 7

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டு வடக்கு சித்தன்கேணிப் பகுதியி லுள்ள வீடொன்றில் பண மும் கணினியும் திருடப்பட் டுள்ளன.

வீட்டில் யாரும் இல்லாத நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள் 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கணினியையும் திருடிச் சென் றுள்ளனர். இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாரி டம் முறையிடப்பட் டுள்ள நிலையில், மேலதிக விசார ணைகளை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

## வடக்கின் சமர் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 7

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தால் வடமா காண ரீதியில் நடத்தப்படும் 'வடக்கின் சமர்' கால்பந் தாட்டப் போட்டிகள் இன்று முதல் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளன.

இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது போட் டியில் மயிலங்காடு ஞானமுரு கன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திருநெல்வேலி மகாத்மா விளையாட்டுக் கழகம் மோதவுள் ளது. தொடர்ந்து இடம்பெறும் இரண்டாவது போட்டியில், குரு நகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நியூவாரியர்ஸ் அணி மோதவுள்ளது. (அ-ம)


**வேலையாள்கள் தேவை**

யாழ். அரசடி வீதி நல்லூரில் அமைந் துள்ள ஷாய்றா சுப்பர் மார்க்கட் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த வேலையாள்கள் தேவை. **077 269 2779**

(CS 21115) (3/6)

அமெரிக்க லொத்தர் இலவச விசா

ஏமாற்றுங்களை தவிர்க்க **உடனே பதியுங்கள்**

Passport அவசியமில்லை

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்

**V2 Travels**

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்

**0768226244**

**பொருளியற் கல்லூரி**

நாவலர் றோட் யாழ்ப்பாணம். K.K.S.றோட் சுன்னாகம். (இரு இடங்களிலும்)

பல்கலைக்கழகத்தை எதிர்பார்க்கும் மாணவர்களுக்கும், ஏனைய துறைசார்ந்தவர்களுக்கும், வெளிநாடு செல்ல எதிர்பார்ப்பவர்களுக்குமான ஆரம்ப பயிற்சிநெறி

**ENGLISH CLASSES**

- Basic Grammer
- Spoken English
- Reading
- Writing
- Listening

முழுமையான பயிற்சி வகுப்புகள்

பிரிவு-I சனி-ஞாயிறு
யாழ். நகரில் : 1- 2.30 PM
சுன்னாகத்தில் : 4 - 5.30 PM

**ஆரம்பம் 08.10.2022 சனி**

பிரிவு-2 திங்கள், புதன், வியாழன்

அனுமதிகளை பெற்றுக்கொள்ளுங்கள்

ஆசிரியர்:- Sakayathasan Denixan
B.A (English Literature)

மேலதிக தொடர்புகளுக்கு-077 376 3511

Note: சித்தன்கேணி BARATHY கல்வி நிறுவனத்திலும் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. உங்கள் பெயர் பதிவினை மேற்கொள்ளவும்



**இலவச அமெரிக்க லொத்தர் விசா**

2024 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
நிரந்தர குடியேற்றத்திற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்.
(18 வயதிற்கு மேற்பட்டோர் தனியாக விண்ணப்பிக்கலாம்.)

2002 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுவரும் இச் சேவையினூடாக 1000க்கும் அதிகமானோர் அமெரிக்கா சென்றுள்ளனர். இச்சந்தர்ப்பத்தை நழுவ விடாது உங்கள் அதிஷ்டத்தை தட்டிச் செல்லுங்கள்.

திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிடெட்
321, K.K.S.Road, Jaffna.

தொடர்புகளுக்கு : 0777554528

**விரைவு பொதிகள் சேவை**

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை
5-7 நாட்களுக்குள் விநியோகிக்கப்படுகின்றன

**Lanka Cargo Worldwide Express**

315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். **076 283 2397**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில் 09 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- மூன்று பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- பார்வையிடும் நேரம்
  காலை 09.00- மாலை 06.00 மணி வரை

தொடர்பு- **076 755 8606**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 09 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- A09 வீதியில் இருந்து 200m தூரம்
- 20 அடிப்பாதையுடன்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500 m தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 3 லட்சம் ரூபா மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 09.00- மாலை 06.00

**077 8748135**

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் உள்ள மென்பான விநியோகஸ்தர்களிற்கு
1. கணினி அறிவுடைய பெண் ஊழியர்
2. பொருட்கள் ஏற்றி இறக்குவதற்கு உதவியாளர்கள் ஆண்கள் தேவை.
Note: யாழ். நகரில் இருந்து 5km தூரத்திற்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 021 221 2161, 077 022 7620

(CS 21116) (3/6)


# மரண அறிவித்தல்

மண்ணில் 12 . 07 . 1942



விண்ணில் 06 . 10 . 2022

## திருமதி சூசைமுத்து இராசமணி

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வளாக ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைமுத்து இராசமணி நேற்று (06.10.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சூசைமுத்து அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசதுரை மற்றும் நாகம்மா, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற முத்துப்பிள்ளை மற்றும் யோகமணி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற யேசுராசா மற்றும் மேரி (கிளி, ஒஸ்ரியா), ரவிராசா (ஜேர்மனி), ஜெயராசா (சுவிஸ்), ஜீவராசா, றொபின்ராசா (ஜேர்மனி), சார்ல்ஸ் நிமலராசா (கண்ணன் - ஜேர்மனி), சுகிர்தராசா (சுதன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிறில் (ஒஸ்ரியா), கங்கா (ஜேர்மனி), சுதா (சுவிஸ்), தனுஷா, கார்த்திகா (ஜேர்மனி), கவி (ஜேர்மனி), ஜானகி ஆகியோரின் அன்பு மாமியாரும், அனோட், மைக்கல், ஸ்ரீபன், டாவிட், நென்சி, யூலியான், [illegible]லிஷா, எஸ்ரோன், எக்லோன், ஜஸ்லினா, நிஸ்வேட், றிக்காடோ, றொமீரா, [illegible]னா, ஷாயிரா, தமித் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், எய்டன், எலெக் [illegible]யோரின் பூட்டியும் ஆவார்.

[illegible]னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

[illegible] அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் [illegible]க்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வளாக வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
[illegible]777 506 488, 077 666 5854

தகவல்:
குடும்பத்தினர்

(CS 21127) (1/6)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம்
  காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்

**077 8147 389**
**077 2417 589**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ[illegible]ரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 07.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.